செ.வெ.எண்:01 நாள்:01.11.2021

**அரசு வழிகாட்டு நெறிமுறைகளைப் கடைபிடித்து 1 முதல் 8 - ஆம் வகுப்புகள் வரை பள்ளிகள் திறக்கப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, பள்ளிக்கு வரும் மாணவ, மாணவியர்களுக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.**

**பள்ளியில் உள்ள வகுப்பறைகள், நடைபாதை, கழிப்பறை வளாகங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், வேலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.மதியழகன் ஆகியோர் இன்று (01.11.2021) 1 முதல் 8 -ஆம் வகுப்பு வரை பள்ளிகள் திறக்கப்பட்டதை நேரில் பார்வையிட்டு, பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:

கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. கொரோனா நோய்த் தொற்றிலிருந்து, குழந்தைகள், மாணவ, மாணவர்களை பாதுகாக்கும் பொருட்டு அனைத்து பள்ளிகளும் மூடப்பட்டது. மேலும், மாணவ, மாணவிகளின் கற்றல் பாதிப்பு ஏற்படாமலிருக்க பள்ளிகள் மூலம் இணையவழி வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தது.

கொரோனா நோய்த் தொற்று குறைந்து வந்த நிலையில் மாணவ, மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களின் கற்றல் பாதிப்படையாமல் இருக்க 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி 01.09.2021 அன்று பள்ளிகள் திறக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து, 1 -ஆம் வகுப்பு முதல் 8 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இன்று (01.11.2021) முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு நடத்தப்படும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1713 அரசு உயர்நிலைப் பள்ளிகள், 18 அரசு உதவி பெறும் பள்ளிகள், 8 பகுதி உதவி பெறும் பகுதிகள், 46 சிபிஎஸ்இ பள்ளிகள், 3 ஐசிஎஸ்இ பள்ளிகள், 263 யுனைடேட் பள்ளிகள் மற்றும் 4 அங்கீகரிக்கப்படாத பள்ளிகள் என மொத்தம் 2055 பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிகளில் முதலிரு வாரங்களுக்கு மாணவர்களுக்கு உற்சாகமும், நம்பிக்கையும் ஊட்டும் வகையிலான கதைகள், பாடல்கள், விளையாட்டு, வண்ணம் தீட்டுதல், நினைவாற்றலை வளர்ப்பதற்கான விளையாட்டு உத்திகள் போன்றவற்றை வகுப்பறைகளில் வழங்கப்படும்.

சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு (600 நாட்களுக்கு) மேலாக முறையான பள்ளி சார்ந்த கற்றலில் குழந்தைகள் ஈடுபட இயலாத காரணத்தால் அந்தந்த வகுப்புக்குரிய திறன்களை முழுமையாக அடைய முடியாத நிலை இருக்க வாய்ப்புள்ளது. இதனை ஈடுசெய்யும் விதமாக ஆசிரியர்கள் செயல்பட வேண்டும்.

அரசு தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள், சமையல் அறை, நடைபாதை, கழிப்பறை வளாகங்கள் ஆகியவற்றையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், தனிமனித இடைவெளியை கடைபிடித்தல், முகக்கவசம் அணிதல் மற்றும் கிருமி நாசினி மற்றும் சோப்பு கொண்டு அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல் போன்ற கொரோனா நோய் தடுப்பு குறித்து விழிப்புணர்வுகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.ந.மணிமேகலை நாகராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கே.பி.மகேஸ்வரி, மாவட்ட கல்வி அலுவலர் திரு.எம்.பொன்முடி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் திரு.வி.சி.தம்பிதுரை, தலைமை ஆசிரியர்கள் திரு.பி.பாலசுந்தரம், திரு.அருள்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி**